# பாடம் ஐந்து



# இயேசுவின் உயிர்த்தெழுதல் ஏன் நம்பச் செய்கிறதாய் இருக்கிறது?

மேலே உங்கள் பெயரை எழுதி கொடுக்கப்பட்ட காலி இடங்களில் வேதாகம வசன குறிப்புகளை நிரப்பவும்.

## இயேசுவை கண்கூடாகப் பார்த்த பல சாட்சிகள்



கடந்த கால சம்பவங்களின் ஒரு ஞாபகச் சின்னம்.

வரலாறு நிகழ்ந்தது. அநேக பழங்கால ஞாபகச் சின்னங்கள், எகிப்திய பிரமிடுகளைப் போல் அந்த வரலாற்றை நிரூபணம் செய்கின்றன. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பதாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளுக்கு அவை சாட்சிகொடுக்கின்றன. இயேசுவின் உயிர்த்தெழுதல் நிகழ்ந்தது கல்லறை காலியாக வைக்கப்பட்டது. இதற்குப் பதிலாக நமக்கு மிக அதிகமாக நம்பக்கூடிய வேறு காரியங்கள் இருக்கின்றன. அவரது மரணத்திற்குப் பின் அவரை உயிரோடு கண்டவர்களால் எழுதப்பட்ட பதிவேடுகள் உண்டு.

இயேசுவின் வாழ்க்கை, அற்புதங்கள், உயிர்த்தெழுதல் இவையெல்லாம் புத்திசாலித்தனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட கதைகள் அல்ல என்று புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.[1] ஆனால் கண்ணால் கண்ட சாட்சிகளின் விவரங்களாக என்ன நடந்ததென்று கூறப்பட்டுள்ளது.[2] அவரது உயிர்தெழுதல் ஆதிகாலத்திருச்சபையின் பிரசங்கங்களின் மைய இடத்தையும் பெறுகிறது[3], நாம் மீண்டும் இந்தச் சாட்சிகளைக் கேட்டு நமது தீர்ப்பைச் சொல்ல வேண்டும்.

வரலாற்று குறிப்பு: செல்வந்தர்கள் ஒரு குகை போன்ற கல்லறையில் புதைக்கப்பட்டு அதின் வாயிலை ஒரு கல்லினால் மூடுவார்கள். இயேசுவும் ஒரு செல்வந்தனின் கல்லறையை பெற்றார்.

### இயேசு உயிரோடிருந்ததைக் கண்டவர்கள் பலர்

இயேசு தாம் சிலுவையிலறையப்பட்டதற்குப் பின் மூன்றாம் நாளிலே உயிரோடெழுந்தார் என்றும் நாற்பது நாட்களாக நீடித்த கால கட்டத்தில் பலர் அவரை கண்டார்கள் என்றும் நமக்குச் சொல்லப்படுகிறது. பார்க்கவும் அப்போஸ்தலர் 1:3

… … … … … … … … … … … … … … … … …

… … … … … … … … … … … … … … … … …

… … … … … … … … … … … … … … … … …

… … … … … … … … … … … … … … … … …

### பல சாட்சிகள் சேர்ந்து உண்மையை அதிக நிச்சயமானதாக ஆக்குகிறார்கள்.

இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் உண்மையை உறுதி செய்ய போதுமானதாகக் கருதி தவறு செய்தவனைத் தண்டிக்க யூதச் சட்டம் இடம் தருகிறது.[4] இயேசுவின் உயிர்த்தெழுதலின் உண்மையை உறுதிசெய்ய எத்தனையோ சாட்சிகள் இருந்ததென்று பாருங்கள். வாசிக்கவும்

1 கொரி. 15:3-9 வசனங்கள் 7-8ஐ எழுதவும்.

… … … … … … … … … … … … … … … … …

… … … … … … … … … … … … … … … … …

… … … … … … … … … … … … … … … … …



தேவைக்கதிகமான சாட்சிகள்

[1] பேதுரு 1:16
[2] லூக்கா 1:1-4
[3] அப்போஸ்தலர் 4:33
[4] எபிரேயர் 10:28

### அவர் ஒரு உண்மையான நபர் - ஒரு ஆவியல்ல

இயேசு கொஞ்சம் உணவை சாப்பிட்டார்.

சீடர்கள் இயேசுவை மிக அருகிலிருந்து காணும் காட்சியைப் பெற்றார்கள். அவர் ஏதோ தொலைவிலிருந்த நிழலாட்டமான உருவமுமல்ல அல்லது ஒரு அவர் ஆவியுமல்ல. அவர்களை நம்பச் செய்வதற்கு, இயேசு தமது துளைக்கப்பட்ட கரங்களையும் கால்களையும் காட்டி, தன்னைத் தொட்டுப் பார்க்கும்படியாக அழைத்தார். அவர் தனது சரீரம் உண்மையானது என நிரூபிக்க,[5] அவர் சமைக்கப்பட்ட உணவை சாப்பிட்டார் பார்க்கவும் லூக்கா 24:39

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...



அவர்கள் உடலை சாட்சியாக கொண்டு வரமுடியவில்லை.

## சீடர்கள் பொய் பேசாதவர்கள்.

இயேசுவுக்கு அதிகமான விரோதிகள் இருந்தனர். அவரது மரணத்திற்குக் காரணமானவர்கள் அவர் உயிரோடெழுந்திருக்கவில்லை எனச் சொன்னார்கள். என்றாலும் அவர்கள் இயேசு மரித்து விட்டார் என்பதை நிரூபிக்க அவரது உடலை எடுத்துக் காட்ட முடியவில்லை. எனவே சீடர்கள் அவரது உடலைத் திருடிவிட்டு, அவர் உயிர்த்தெழுந்தார் என்று பொய் சொல்வதாக வதந்தியை பரப்பினார்கள்.[6] பின்வரும் காரணங்களினால் சீடர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலை ஒரு கண்டுபிடிப்பாக செய்தார்கள் என்பது ஏற்றுக் கொள்ளமுடியாததாகும்.

### நற்செய்தியின் உயர்ந்த நீதி நெறிசார்ந்ததொனிக்கு பொய்கள் முற்றிலும் முரணானது.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இயேசு கிறிஸ்து வகுத்த உயர்ந்த திட்ட வரையரைகளுக்கு வாழ்ந்து காட்ட வேண்டும் என விசுவாசிகளை ஊக்குவிக்கிறார்கள். பொய் சொல்வதைக் குறித்து அவர்களுடைய வலிமையான கண்டிப்பு அவர்கள் தாங்களே நேர்மையானவர்கள், உண்மையுள்ள மனிதர்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. பார்க்கவும் எபேசியர் 4:25.

கண்டிப்பாக நேர்மையான மக்கள்

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

பொய் சொல்வது பாவமாகும், ஆனால் மற்றவர்கள் உங்கள் பொய்யை விசுவாசிக்க வேண்டுமென்று ஊக்குவிப்பது அதனைவிட மோசமானது. சீடர்கள் அறிவித்த இயேசுவின் உயிர்த்தெழுதல் உண்மையென்றே நம்பப்பட வேண்டும்.[7]



எதனையும் லாபமாகப் பெற முடியவில்லை. மரணம் தவிர.

### பொய் சொல்வதினால் எதனையும் சம்பாதிக்க முடியாது

மக்கள் பொய் சொல்லும்போது அதிலிருந்து ஏதாவது கிடைக்கும் என எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் ஒரு வேளை உண்மையையும் சொல்லிவிடலாம். இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி சீடர்கள் பொய் கூறுவதினால் அவர்கள் ஒன்றையும் பெற்றுக் கொள்ளப் போவதில்லை. ஏனெனில் அதிகாரிகள் அவ்வாறு சொல்லப்படுவதைக் கடுமையாக எதிர்த்தார்கள். அப்போஸ்தலர்கள் இயேசு உயிரோடிருக்கிறார் என்று தொடர்ந்து பிரசங்கித்தபோது அவர்கள் சிறைவாசம் மற்றும் மரணத்தினால் அச்சுறுத்தப்பட்டார்கள். வாசிக்கவும் அப்போஸ்தலர் 5:30-33. வசனங்கள் 30 மற்றும் 33-ஐ எழுதவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

---

[5] லூக்கா 24:41-43

[6] மத்தேயு 28:12-13

[7] ஆலோசிக்கவும் 1 கொரிந்தியர் 15:14-15

# சீடர்கள் சுலபமாக ஏமாற்றப்படவில்லை

சிலரோ சீடர்கள் நேர்மையானவர்கள் கபடற்ற மனிதர்கள், இவர்கள் இயேசுவைக் கண்டதாக கற்பனை செய்து கொண்டார்கள் என்றார்கள். வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால். அவர்கள் ஏமாற்றப்பட்டு அவர் உயிரோடெழுந்ததாக எண்ணினார்கள். ஆனால் மேற்கூறிய எண்ணம் உண்மைக்கு வெகுதொலைவிலிருந்தது என்பதற்கு ஆழமான காரணங்கள் உண்டு. பின்வருபவற்றை ஆலோசித்துப் பாருங்கள்.



இயேசுவோடு காலை உணவு

## பகல் தோற்றங்கள் கற்பனையாக இருக்க முடியாது என்பதை குறிப்பிடுகின்றன

மனமானது பரந்த பகல் வெளிச்சத்தில் காரியங்களைக் கற்பனை செய்யக்கூடியது அது குறைவாகவே நிகழக்கூடியது. பல சந்தர்ப்பங்களில் இயேசு பகல் நேரங்களில் தோற்றமளித்தார். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் சீடர்கள் இயேசுவோடு காலை உணவிற்கு ஒரு ஏரியின் கரையிலே கூடினார்கள்! வாசிக்கவும் யோவான் 21:14. வசனம் 12-ஐ எழுதவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

கற்பனை?

## அநேகர் ஏமாற்றப்பட்டனர் என்பது இயலாத காரியம்

இயேசுவை உயிரோடு கண்ட அநேகரைக் குறித்து மறுபடியும் சிந்திப்போம். ஒரு சந்தர்ப்பத்தில் 500 மனிதர்கள் கூடியிருந்தனர். இவர்களெல்லாருமா ஏமாற்றப்பட்டவர்கள்? பார்க்கவும் 1 கொரிந்தியர் 15:6.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

ஐந்நூறு பேர் ஒரே சமயத்தில் அவரைக் கண்டனர்.

## பின்னர் நிகழும் துன்புறுத்தப்படுதல் ஓர் உண்மை தணிக்கையாக இருக்கும்.

ஆழமான கற்பனைகளுக்கு உள்ளாகக் கூடியவர்கள் வேதனையான எதிர்ப்பின் எண்ணங்களினால் நிதானமுள்ளவர்களாகிறார்கள். மரணத்தின் அச்சுறுத்தல் ஒரு மனிதன் யார் என்பதை உணர்த்துகிறது. சீடர்கள் மித மிஞ்சிய கற்பனையினால் பாதிக்கப்படவில்லை. அவர்கள் முற்றிலும் நம்பினது இயேசு உயிரோடெழுந்துவிட்டார் என்பதே. அதற்காக மரிக்கவும் ஆயத்தமாயிருந்தார்கள். பார்க்கவும் அப்போஸ்தலர் 7:59.



... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

ஒருபொய்க்காக ஏன் பாடுபட வேண்டும்?

எருசலேமில் இருந்த அநேகர் இயேசு மரணத்திலிருந்து உயிரோடெழுப்பப்பட்டார் என உறுதியாய் நம்பினர். அவர்கள் இந்த காரியத்தில் எதிர்ப்புகளைச் சந்திக்கும் முன்னும், தங்களது உயிருக்குத் துணிந்து தாங்கள் நம்புவது உண்மைதானா என்று நன்கு விசாரித்திருப்பார்கள். அவர்கள் பொய்க்கோ, கற்பனைக்கோ அல்ல, உண்மைக்காக பாடுபடுவதற்கு ஆயத்தமாயிருந்தார்கள்.




தண்டனைக்குப் பின் வருவது விடுதலை.

# உயிர்த்தெழுதல் எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்று.

இயேசு மற்றவர்களின் பாவங்களுக்காக தண்டிக்கப்பட்டிருந்தால் நாம் அவர் மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பப்படுவதை எதிர்பார்க்க வேண்டும். ஏனெனில் பாவத்திற்கான தண்டனை கொடுத்து முடிக்கப்பட்டவுடன் மரணம் அவரை வைத்துக் கொள்ள எந்த விதமான காரணமும் இல்லை. ஒரு கைதியை அவனது குற்றத்திற்கு தகுந்ததைவிட அதிகம் சிறை வைத்திருப்பது நியாயமற்றதாகும்.

### இயேசு பாவத்திற்காக மரித்திருப்பாரானால் அவர் உயிரோடெழுந்திருக்க வேண்டியதுதான்.

இயேசு உயிரோடெழுந்திருக்கவில்லையென்றால் விசுவாசிக்காக அவர் பெற்ற தண்டனை போதுமானது என்று நம்புவதற்கான வாய்ப்பு இல்லை. அப்பொழுது விசுவாசியானவன் பாவத்திற்கான குற்றம் சாட்டப்பட்டவனாவான். பரலோகத்திலும் அவனுக்கு இடம் மறுக்கப்படும். பார்க்கவும் 1 கொரிந்தியர் 15:17

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

பாவிகள் கடவுளால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் என அறிவிக்கப்படும் முன்பு ஜீவனைப் பிறப்பிக்கிறவராக இயேசுவின் உயிர்தெழுதல் அவசியம்.[8]

சிருஷ்டிகர் மரிக்க முடியாது!

### இயேசு உயிரோடெழுந்திருக்க வேண்டும்.

இயேசு கடவுளானால் (பாடம் 1) மரணம் அவரை மேற்கொள்ள இயலாது.[9] எல்லாவற்றிற்கும் உயிரை அளித்தவராக இருப்பதால் அப்போஸ்தலர் 3:14-15 மரணம் அவரை மேற்கொள்வது என்பது முடியாத காரியம். பார்க்கவும் அப்போஸ்தலர் 2::24.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

### எதிர்காலத்தில் உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்துவதற்கு இயேசு உயிரோடெழுந்திருக்க வேண்டும்.

அநேகரில் முதன்மையானவர் இயேசு

இயேசு திரும்ப இவ்வுலகிற்கு வரும்போது எவ்வாறு மற்றவர்கள் உயிரோடெழுந்திருப்பார்கள் என்பதற்கு உதாரணமாகவே அவர் உயிர்தெழுந்தார். பாவத்தின் எல்லா விளைவுகளையும் செயலற்றதாக்கவே இயேசு பாவத்திற்கான விலைக்கிரயத்தை செலுத்தினார். இதில் சரீர மரணமும் சேர்க்கப்பட்டுள்ளது., இயேசு எப்படி மரணத்தின் மீது வெற்றி கொண்டாரோ அப்படியே விசுவாசிகளும் வெற்றிக் கொள்வார்கள். அவர் திரும்ப வரும்போது அவர்களது உடலானது திரும்பவும் உயிரோடெழுப்பப்படும்.[10]

# முடிவாக

இயேசு உயிரோடெழும்ப வேண்டும், இல்லாவிட்டால் அவர் உலகத்தின் நீதிபதியாக செயல்பட முடியாது. உயிர்த்தெழுதலானது இயேசு உண்மையில் உலகத்தின் நீதிபதி என்பதற்கு முடிவான அடையாளமாக இருக்கிறது.[11]

இந்த ஆலோசனைகளை கவனிக்கும் பொழுது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மீதான உங்களது தீர்ப்பு என்ன? ஆலோசிக்கப்பட்ட சம்பவங்கள் மிகவும் அதிகமானவை, முடிவுகள் முக்கியமானவை, ஆகவே அவைகளுக்கு ஒரு பதில் தேவை.

[8] ரோமர் 4:25

[9] அப்போஸ்தலர் 3:14-15

[10] 1 கொரிந்தியர் 15:22-23

[11] அப்போஸ்தலர் 17:31.